[1992 பிப்ரவரி 7

98—

உடல் ஊனமுற்ற அரசு ஊழியர்களை இடமாற்றம் செய்தல்.

* 4391—திருமதி. ப. சரஸ்வதி :

மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) உடல் ஊனமுற்ற அரசு ஊழியர்களை பொது மாறுதல் என்ற வகையில் இடமாற்றம் செய்வதிலிருந்து விதிவிலக்கு அளிப்பதை அரசு பரிசீலிக்குமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

(அ) மற்றும் (ஆ) அப்படி விலக்கு அளிக்கப்பட வேண்டும் என்கின்ற அரசு உத்தரவு எதையும் பிறப்பிக்கவில்லை.

திருமதி ப. சரஸ்வதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, உடல் ஊயமுற்றவர்கள் ஓரிடத்திலேயிருந்து பல மைல் தூரம் கடந்து சென்று அங்கு பணியாற்றுவதற்கு மிகவும் சிரமமாக இருக்கின்ற காரணத்தினால், இதை அரசு பரிவோடு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மூன்று ஆண்டுப் பணிக் காலம் முடிந்த அரசுப் பணியாளர்களை நிர்வாக நலன் கருதி வேறு இடங்களுக்கு மாற்ற வேண்டும் என்று 1990 ஆம் ஆண்டு அரசு ஆணை வெளியிட்டுள்ளது. இந்த ஆணையிலிருந்து உடல் ஊனமுற்றவர்களுக்கு என்று விலக்கு எதுவும் அளிக்கப்படவில்லை. ஆனால், வாகன வசதி இல்லாத இடங்களுக்கு மாற்ற வேண்டாம் என்கின்ற அறிவுரை மட்டும் எல்லாத் துறையினருக்கும் சமூக நலத் துறை அலுவலர்களால் வழங்கப்பட்டிருக்கிறது.

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 99. திரு. வே. தம்புசாமி ; மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்.

99—

மோகனூர் கிராம ஆதிதிராவிடர்களுக்கு பட்டா.

* 1527—திரு. வே. தம்புசாமி :

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—